**சார்பு நீதிமன்றம், கொடுமுடி,**
**ஈரோடு மாவட்டம்.**
**முன்னிலை :–திருமதி. பி. ஸ்ரீதேவி.எல்.எல்.எம்.,**
**சார்பு நீதிபதி, கொடுமுடி**
**2025ம் வருடம் ஜூலை மாதம் 28ம் நாள் திங்கள்கிழமை**
**அசல் வழக்கு எண்.338/2024**

பழனியம்மாள் ... வாதி

/எதிர்

எஸ். தங்கராஜ் ... பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் திரு.எம்.சதீஷ்குமார் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி, பிரதிவாதி தரப்பில் பி.மாணிக்கம், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி, தாவா தள்ளுபடி ஆகிவிட்ட நிலையில் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

தாவா சொத்தினை நலந்திகடு கண்டு 3 சரிசமபாகங்களாக பிரிவினை செய்து அதில் 1 பங்கை வாதிக்கு தனியே ஒதுக்கி தனிச்சுவாதீனம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியும், மேற்படி வீதம் பிரிவினை செய்ய ஆணையர் ஒருவரை நியமனம் செய்து தக்க உத்தரவிட்டும், பிரதிவாதிக்கு செந்தில் (எ) செந்தில்குமார் 10.02.2010ம் தேதியில் எழுதிக்கொடுத்து ஆவண எண்.271/2010 ஆக கொடுமுடி சார் பதிவு அலுவலகத்தில் பதிவான கிரய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அது வாதியையோ, வாதிக்கு தாவா சொத்தில் உள்ள பங்கு பாத்தியத்தினையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று வளிம்புகை செய்தும், பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ தாவா சொத்தில் நிரந்தர பாகப்பிரிவினை ஏற்படும்வகையில் எந்தவிதமான மாறுதலோ, வில்லங்க விவகாரமோ செய்யக்கூடாது என்று ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், தாவாவின் செலவு தொகையை வாதிக்கு பிரதிவாதி வழங்க தக்க உத்திரவிட்டும், மேலும் இன்னபிற பரிகாரங்கள் வாதிக்கு வழங்கி தக்க உத்திரவிட வேண்டி வணக்கமாய்ப்பிரார்த்திக்கிறார்.

Plaintiff called absent. No representation. Hence the suit is dismissed for default.

இன்று 2025–ம் வருடம் ஜூலை மாதம் 28ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.07.28 16:09:44 +0200

சார்பு நீதிபதி,
கொடுமுடி.